அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2001

எனது இல.தா/1/அ/1/38
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு..07
2001 ஏப்ரல் மாதம் 24 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதான செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

**<u>அரசாங்க நிர்வாக, விடய பொறுப்பு அமைச்சின் தாபனப் பிரிவையும், இணைந்த சேவைகளின் பிரிவையும் மீளமைத்தல்-</u>**

1996.04.02 ஆந் திகதிய 12/96 இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலமாக திருத்தம் செய்த தாபன விதிக்கோவையின்1 அத்தியாயத்தின் 4 ஆம் பந்திக்கு செய்யப்பட்ட திருத்தங்களை நீக்கி பின்வரும் பந்தியை பதிலீடு செய்கின்றேன்.

4. அதிகாரங்களை செயற்படுத்துதல் :-

''தாபன பணிப்பாளர் நாயகத்தினால் அமுலாக்குவதற்கு இயன்ற எவ்வகைப்பட்ட அதிகாரத்தை அமுலாக்குவதற்கும் தாபன பணிப்பாளர் நாயகத்தினால் வழங்குவதற்கு இயன்ற எவ்வகைப்பட்ட அனுமதியை வழங்குவதற்கும் அரசாங்க நிருவாக விடய பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு முடியும்''

02. தாபன விதிக்கோவை, சேவை பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்பு விதிமுறைகள் மற்றும் ஏனைய ஆலோசனை கோர்வைகளில் குறிப்பிட்டுள்ள ''தாபனப் பணிப்பாளர்'' மற்றும் ''இணைந்த சேவைகள் பணிப்பாளர்'' எனும் பதவி பெயர்களுக்குப் பதிலாக ''தாபனப் பணிப்பாளர் நாயகம்'' மற்றும் ''இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்'' என்ற பதவிப் பெயர்களை பதிலீடு செய்தல் வேண்டும்.

03. மேற்படி ஏற்பாடுகள் 2001 பெப்ரவரி மாதம் 14 ஆந் திகதியிலிருந்து நடைமுறையில் இருக்கும்.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு